***<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD.</u>***
***<u>DATE : 30.08.2024</u>***

Case No. : OS. 82/2022

Deposition of Witness for Prosecution : PW1

Name : பெரியான்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of August 2024

**<u>குறுக்குவிசாரணை:</u>**

எவ்வளவு விஸ்தீரணத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 5 சென்ட் ஆகும். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி என்னுடையமனுவின் பேரில் பார்வையிட்டனர் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் உள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண். 19/2 ஆகும். 1993ல் நத்தம் நிலவரி திட்டத்தின்கீழ் தாவா சொத்தான சர்வே எண். 19/2 என்பது ஒன்பது உர்பிரிவகளாக பிரிக்கப்பட்டுள்ளதாக ஆணையர் அறிக்கையில் உள்ளது என்றால் அது தவறானது ஆகும். ஆணையர் அறிக்கைக்கு எங்களது தரப்பில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் எங்களுக்கு தெரியாது. தாவா சொத்துக்கு செக்குபந்தி வடக்கு – மொய்யாகவுண்டர், – தெற்கு – வரதன் அண்ணாமலை, மேற்கே – அரசு புறம்போக்கு, கிழக்கு– எங்களது நிலம் உள்ளது. மேற்படி செக்குபந்தி தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நான் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 19/2ல் உள்ள மொத்தம் 9 உட்பிரிவுகளில் 5ல் வீடுகள் கட்டப்பட்டிடுள்ளது என்றால் சரிதான். அந்த குடியிருப்பில் உள்ளவர்கள் மின்இணைப்பு பெற்று வீட்வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். மேலும் 2 மனை பிரிவுகள் காலியாக உள்ளது என்றால் இல்லை. மேற்படி குடியிருப்புகள் விவரத்தை மறைத்து வ.சா.ஆ.1 நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் மேற்படி வீடுகள் உள்ள விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நத்தம் நிலவரி திட்டத்தின்கீழ் சர்வே எண்.19/2 வகைபாடு செய்யப்பட்டுள்ளதால் வா.சா.ஆ.2 செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. என்ன தேதி மாதத்தில் நான் வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. வாடகைக்கு விட்டதற்கான வாடகை ஒப்பந்தம் போன்ற ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் கிரையம் பெற்ற பிறகு 2011ல் ஒரு வீடு கட்டினேன். அந்த வீட்டிற்கு நான் வரி செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. வீடு கட்டியதற்கான ரசீதுகள் எதாவது உள்ளதா என்றால் இல்லை. கூலிங் சீட் தாவா சொத்தில் உள்ள வீட்டில் பிரதிவாதிகள் அனைத்தது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் எதாவது அளித்தேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு மூன்றாம் நபர்கள் இல்லை என்றாலும் அவர்கள்தான் உரிமையாளர்கள் என்றால் தவறு. 40 வருடங்களுக்கு மேலாக பிரதிவாதிகள் குடியிருந்து வருவதால் அவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தவறானது. பிரதிவாதிகள் ஏற்கனவே குடியிருந்து வரும் விவரத்தை மறைத்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையனால்தான் செக்குபந்தி நான் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2017ல் நான் பிரதிவாதிகளை வாடகைக்கு அமர்த்தியதாக தவறாக சொல்கிறேன் என்றாலும்

வாடகைதாரர் – உரிமையாளர் என்ற உறவு இல்லை என்றால் தாவா சொத்து பிரதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து விவரம் தெரிந்தே நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. M. Jayanthi,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.